வெடிகுண்டு கலாசாரம்:

ரஜினிகாந்த் பற்றி சட்டசபையில் பேச்சு

அ.இ.அ.தி.மு.க. உறுப்பினருக்கு கருணாநிதி பதில்

சென்னை, மே. 28-

வெடிகுண்டு கலாசாரம் பற்றி பேசிய நடிகர் இப்போது எங்கே போனார் என்று சட்டசபையில் தாமரைக்கனி கேட்டதற்கு முதல்-அமைச்சர் கருணாநிதி பதில் கூறினார்.

சுவன ஈர்ப்பு தீர்மானம்

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் குண்டு வெடித்தது பற்றிய சுவன ஈர்ப்பு தீர்மானத் தின்மீது நேற்று சட்டசபையில் விவாதம் நடந்தது.

இந்த விவாதத்தின் மீது அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் தாமரைக்கனி கலந்து கொண்டு பேசுகையில் கூறியதாவது:-

வெடிகுண்டு கலாசாரம்

இந்த ஆட்சி வந்த பிறகு கோவில்களுக்கு போக பெண்கள் பயப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் வெடிகுண்டு கலாசாரம் பரவுகிறது என்று ஒரு நடிகர் கூறினார். இப்போது மதுரை மட்டுமின்றி தூத்துக்குடி, கொடியங்குளம், கயத்தாறு, முக்கூடல் ஆகிய இடங்களில் வெடிகுண்டு வீச்சு சம்பவங்கள் நடந்து உள்ளன.

இதற்கு அந்த நடிகர் எந்தவித கருத்தையும் கூறவில்லை. வெடி குண்டு சம்பவங்களை ஆரம்பத் திலேயே தடுத்து நிறுத்தி முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இவ்வாறு தாமரைக்கனி பேசினார்.

கருணாநிதி பதில்

விவாதத்தின் இறுதியில் முதல்-அமைச்சர் கருணாநிதி பேசினார்.

அப்போது அவர் தாமரைக் கனியின் பேச்சுக்கு பதில் அளித்து கூறியதாவது:-

ரஜினிகாந்த் சார்பில் நன்றி

ஒரு நடிகர் வெடிகுண்டு கலாசாரம் என்று கூறினார். இப்போது எங்கே போனார் என்று தாமரைக்கனி விலாசம் தேடிக்கொண்டிருக்கிறார். அவர் பெயரை கூறாவிட்டாலும் ஞான சேகரன் சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் என்று கூறிவிட்டார்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் முழுமையாக அரசியலில் ஈடு படாவிட்டாலும், சட்டசபையில் பேசும் அளவுக்கு தாமரைக்கனி ஒரு சிறப்பு அமைத்துள்ளார். அதற்காக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் சார்பில் நன்றி கூற வேண்டும்.

மலைராஜம் வீட்டில் வெடி குண்டு வெடித்தபோது சோதனை செய்யப்போன போலீசார், ஆட்சியாளர்களால் மிரட்டப்பட்டனர். இன்று அப் படிப்பட்ட நிலைமை கிடையாது. போலீசார் சுதந்திரமாக விசாரணை நடத்துகிறார்கள்.

பதவி பறிபோகாது

"தமிழ்நாட்டில் வெடிகுண்டு கலாச்சாரம் பரவிவிட்டது" என்று ரஜினிகாந்த் பேசிய தற்காக அமைச்சர் பதவியில் இருந்த ஆர்.எம்.வீரப்பன் நீக் கப்பட்டு தண்டனைக்குள்ளா னார். இன்று தாமரைக்கனி பேசியதற்காக இங்கு இருக்கிற அமைச்சர்களின் பதவி பறி போய் விடாது.

கடந்த ஆட்சியில் குற்றங்கள் தடுக்கப்படவேண்டும் என்பதை விட அவற்றை ஊக்கப்படுத்துவ தற்கு ஆட்சியாளர்கள் துணை போகும் நிலை இருந்தது. இது போன்ற நிலை இந்த ஆட்சியில் நிச்சயம் இருக்காது.

இவ்வாறு முதல்-அமைச்சர் கருணாநிதி பேசினார்.